**அகுரண பிரதேச சபை - 2022**
**-------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.

அகுரண பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அகுரண பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கையொன்றோ அல்லது ஏனைய அடிப்படையொன்றோ இல்லாமல் யாலுகஹவெல கழிவுப் பொருள் தொகுதிக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன நிதிஏற்பாடு கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வாய்மொழி மூலம் கேட்டு மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | யாலுகஹவெல சேதனப் கழிவுப் பொருள் தொகுதி அபிவிருத்திச் செலவினம் ரூபா 4,758,298 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முழுச் செயற்திட்டத் திற்காக செலவினம் மூலதனமாக்கப்பட்டது. | செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற பெற வேண்டிய ரூபா 4,603,560 ஆன முச்சகர் வண்டி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணப்படும் நிலுவையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கு இடையே ரூபா 36,993,987 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் 571(3) | 2009 – 2019 இற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய 07 நானாவித வைப்புக்கள் மற்றும் 2018 – 2020 காலப்பகுதிக்குரிய 05 நிர்மாண வைப்புக்கள் உட்பட மொத்தம் ரூபா 161,639 ஆன 12 வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவிற்காக கோரல் மேற்கொள்ளப்பட வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,683,350 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,400,644 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,626,800 | 8,671,101 | 8,632,142 | 3,545,301 | 7,626,800 | 7,912,202 | 6,271,769 | 3,506,342 |
| (ii) | வாடகை | 6,383,839 | 6,794,574 | 6,910,641 | 320,368 | 5,763,839 | 4,851,949 | 3,227,019 | 436,435 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,855,000 | 4,180,200 | 4,180,200 | - | 3,630,000 | 4,141,450 | 3,445,900 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 34,057,500 | 68,030,719 | 60,709,758 | 27,286,976 | 69,763,400 | 75,108,357 | 17,811,077 | 19,996,015 |
| | | 51,923,139 | 87,676,594 | 80,432,741 | 31,152,645 | 86,784,039 | 92,013,958 | 30,755,765 | 23,938,792 |

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 3,544,986 ஆக இருந்ததுடன் அலகொன்றில் வீதவரி நிலுவை ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 46 ஆதனங்களில் மொத்தம் ரூபா 805,215 ஆன வீத நிலுவையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்தை அறவிட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | தற்போது மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 206,600 ஆன நிலுவை விளம்பர பதாதைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமி இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,830,689 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 25,433,495 ஆக இருந்தது. | அட்டவணைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் கடிதங்கள் மற்றும் கிடைத்துள்ள அட்டவணைகளுக்குரிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,600,000 ஆன 24 அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டில் ஒதுக்கீடு செய்த முன்மொழிவுகள் மாற்றப்பட்டு செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | யாலுகஹவெல கழிவுப்பொருள் தொகுதியின் உக்காத அடுப்பு மூலம் எரிக்கப்பட்ட போதும் அதிலிருந்து வரும் சாம்பல் பாதகமான வகையில் சுற்றாடலுக்கு விடுவிக்கப் பட்டிருந்ததுடன் சலிக்கும் இயந்திரத்தின் மூலம் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன. | கழிவுத் தொகுதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சலிக்கும் இயந்திரம் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக | இயந்திரங்களைப் பயன்படுத்தி கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் இருந்து மலக் கழிவுகளை அகற்றுவதற்காக முறையாக குழிகளை குறித்த காலப்பகுதியில் சுத்திகரித்தல் மற்றும் வெறுமை யாக்குவதற்கான கலி வண்டி சேவையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வேறு சபைகளிலிருந்து குறித்த சேவையை பெற்றுக் கொள்வதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 36,667,265 ஆக காணப்பட்டதுடன் அதில் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,887,680 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 3,545,815 ஆன மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 39,625,612 ஆக காணப்பட்டதுடன் அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 11,250,264 மற்றும் 3 இற்கு 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 695,056 ஆன மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபை பயன்படுத்தும் 02 இயந்திர உபகரணங்கள் மற்றும் உழவு இயந்திரத்தின் உரித்தினை கையேற்காமல் இருந்ததுடன் அவ்வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்குரிய தகவல்கள் எதுவும் பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் உரித்து தொடர்பாக மற்றும் தகவல்கள் இல்லாத வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக | உரித்து கையேற்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபை பயன்படுத்தும் பன்சலதன்ன தோட்ட மயானம் அமைந்துள்ள காணி மற்றும் விலான உடகம ஹபுகொல்ல தோட்டக் காணி என்பவற்றின் உரித்தினைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு கையேற்க நடவடிக்கை எடுப்பதாக | உரித்தை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 17,649,179 ஆன மோட்டார் கிரேடர் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது. | ஏனைய சபையொன்றுடன் பரிமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்களும் மிகை** அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது அதில் 10 பதவிகளில் 24 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 20 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் கொள்கைகளை செயற்படுத்தியதன் காரணமாக வெற்றிடங்கள் காணப்படுவதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும் |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** முன்னைய ஆண்டின் சனவரி மார்ச் மாதங்களில் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 383,272 ஆன கடன் மீதியொன்றும் மரணித்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 6,645 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை | கடன் மீதிகளை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 04 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 163 சதவீதம் வரையிலும் 05 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | பணவீக்க நிலைமை காரணமாக வருமானங்கள் மற்றும் செலவினங்களை உயர்மட்டத்தில் அடைய முடியவில்லை. | கவனத்தடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப் பட்டிருந்த போதிலும் அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |